செ.வெ.எண்: 50 **நாள்.18.11.2026**

புதுக்கோட்டை மாவட்டம்

ஆதரவு நபர்கள் பணியிடங்களுக்கு மதிப்பூதியம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பிட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (போக்சோ) சட்டம் 2012 இன் கீழ் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது தேவையான ஆதரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக ஆதரவு நபர்கள் (Support Persons) - 20 பணியிடங்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விவரப்படி மதிப்பூதியம் அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக நிரப்பிட உள்ளதால் அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. பதவியின் பெயர்- ஆதரவு நபர்- (Support Persons), **பதவியின் எண்ணிக்கை**-20, **மதிப்பூதியம்**- ரூ.10,000/- (4 தவணைகளாக (தலா ரூ.2,500/-) விடுவிக்கப்படும்.

கல்வித்தகுதி:

குழந்தைகள் உரிமைகள் அல்லது குழந்தைகள் பாதுகாப்பிற்காக பணியாற்றும் நபர்கள்/ அமைப்புகள்,சமூகப்பணி, சமூகவியல், சட்டம், உளவியல், குழந்தை வளர்ச்சி, சுகாதாரம் அல்லது கல்வித் துறைகளில் முதுகலைப்பட்டம் பெற்ற நபர் அல்லது குழந்தை பாதுகாப்பு/ வளர்ச்சித்துறையில் 3-ஆண்டுகள் அனுபவமுள்ள பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். **வயது**: 25 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

குறிப்பு: குழந்தை உரிமை மீறல் மற்றும் பிற குற்ற வழக்குகள் உடையோர் விண்ணப்பிக்க இயலாது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி தகுதிக்கான அனைத்துச் சான்றிதழ்கள், புகைப்படம் மற்றும் அனுபவ சான்றிதழ்கள் போன்றவற்றின் நகல்களுடன் 28.11.2026 அன்று மாலை 5.30-க்குள் கீழ்குறிப்பிட்ட அலுவலக முகவரிக்கு வந்து சேர வேண்டும். விண்ணப்பங்களை https://pudukkottai.nic.in/ என்ற இணையதளத்தின் வாயிலாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களின் ஒளி நகலுடன் தபால் மூலமாகவோ அல்லது கொரியர் மூலமாகவோ குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு வந்து சேரும் வகையில் அனுப்பப்பட வேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் யாவும் முன் தகவலின்றி கடிதப் போக்குவரத்தும் நிராகரிக்கப்படும். இது தொடர்பான மேற்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி: மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, முன்னாள்படை வீரர்கள் மைய வளாகம், கல்யாணராமபுரம் 1-ஆம் வீதி, புதுக்கோட்டை–2, தொலைபேசி எண்-04322-221266. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:


Pro Pudukkottai


PRO PDKT


@PRO_Pudukkottai


Pro.Pudukkottai